

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 54 | பாரிப்பு 10 | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஜூலை - 2023 |
|---|---|---|---|
| KADHIR 54 | PAARIPPU 10 | THIRUVALLUVAR AANDU 2054 | JULY - 2023 |


ஜூலை 15 கர்மவீரர்
காமராஜர் அவர்களின் பிறந்த தினம்



ஜூலை 27 மேதகு டாக்டர்
APJ அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினம்



## மறைந்த தலைவர்களின் தியாகத்தை போற்றுவோம்!

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தெற்கு மண்டல செயலாளர் பொறியாளர் M.ரவி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு திருநெல்வேலி - தூத்துக்குடி கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை துணைத்தலைவர் பொறியாளர் S.ஜெகதீசன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் S.இந்திராகாந்தி, துணைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**பொதுச்செயலாளர் மடல்**

மடல் - 10 (2022 - 2023)



## தொடரும்
## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறையில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு விதி 47 (1)ன்படி தற்காலிக பதவி உயர்வு அளிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

நீர்வளத்துறையில் உதவிசெயற்பொறியாளர் காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) சுமார் 141 பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட உள்ளதாக தெரிய வருகிறது. பொதுப்பணித்துறையில் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. இன்னும் காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) தயாரிக்கப்படவில்லை என தெரிகிறது. சுமார் 100 ஆக இருக்க வாய்ப்பிருக்கிறது.

21 தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 2018ல் தொடுக்கப்பட்டு ஒரே ஒரு Hearing மட்டும் நடந்த வழக்கில் கடந்த திங்கள் 03.07.2023 அன்று ஒரு இடைக்கால ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சில அண்மை தகவல்கள் தெரியாமல் அல்லது மறைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் அடுத்த விசாரணை வருகிற 17.07.2023 அன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

உச்சநீதிமன்றத்தில் இவர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று நீதிமன்ற தடையாணை வழக்கு (Stay Order) இந்த மாதம் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு நீர்வளத்துறையில் காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) பரிசீலனையில் உள்ளதாக தெரிய வருகிறது. பொதுப்பணித்துறையில் 31 செயற்பொறியாளர் பதவிகளுக்கு காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) அரசின் பரிசீலனையில் உள்ளதாக தெரிகிறது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளைத்தலைவர் பொறியாளர் P.மாரிச்செல்வன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிழக்கு மண்டல செயலாளர் வாழ்த்து தெரிவித்தார்.



## 02.07.2023 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 02.07.2023 அன்று காலை 11.00 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் சங்க அலுவலகத்தில் மாநிலத்தலைவர் சு.பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத்தலைவர் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினார். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார்.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

**தீர்மானங்கள்:-**

1. கிளைச்சங்க தேர்தல் தேதிகள் மற்றும் கலந்து கொள்ளும் மையச்சங்க பொறுப்பாளர்கள் ஆகியவை குறித்து முடிவு செய்யப்பட்டது.

2. மாநில பொதுக்குழு கூட்டம் மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மையச்சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் 27.08.2023 அன்று சேலத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

---

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் M.இராஜமாணிக்கம், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைச்செயலாளர் வாழ்த்து தெரிவித்தார்.



# தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ.ப.து.)

சேப்பாக்கம் சென்னை - 600 005.

## 2023 - 2024 ஆம் ஆண்டு கிளைப் பொறுப்பாளர்கள் தேர்வு கிளைப் பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு

| வரிசை எண் | கிளையின் பெயர் | கூட்ட நாள் | கலந்து கொள்ளும் மையச் சங்க பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 20.08.2023 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர் |
| **வடக்கு மண்டலம்** | | | |
| 2. | காஞ்சிபுரம் | 15.07.2023 (மு.ப.) | பொறி. எஸ்.பார்த்தசாரதி<br>நிதிச்செயலாளர்<br>பொறி. என். புண்ணியகோட்டி<br>பொங்கும்நிதி செயலாளர்<br>பொறி. கே. சேரலாதன்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| 3. | வேலூர் | 30.07.2023 (மு.ப.) | பொறி. எஸ்.பார்த்தசாரதி<br>நிதிச்செயலாளர்<br>பொறி. கே. சேரலாதன்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| 4. | கடலூர் | 16.07.2023 (மு.ப.) | பொறி. என். புண்ணியகோட்டி<br>பொங்கும்நிதி செயலாளர்<br>பொறி. கே. சேரலாதன்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| **கிழக்கு மண்டலம்** | | | |
| 5. | திருச்சி | 16.07.2023 (பி.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. ஆர்.தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| 6. | தஞ்சாவூர் | 05.08.2023 (பி.ப.) | பொறி. சு. பாஸ்கரன்<br>மாநிலத்தலைவர்<br>பொறி. ஆர்.தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| 7. | திருவாரூர் - நாகை | 05.08.2023 (மு.ப.) | பொறி. சு. பாஸ்கரன்<br>மாநிலத்தலைவர்<br>பொறி. ஆர்.தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| 8. | புதுக்கோட்டை | 16.07.2023 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. ஆர்.தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| **தெற்கு மண்டலம்** | | | |
| 9. | விருதுநகர் | 27.07.2023<br>(பி.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச் செயலாளர்<br>பொறி. எம். ரவி<br>தெற்கு மண்டல செயலாளர் |
| 10. | திருநெல்வேலி -<br>தூத்துக்குடி | 21.07.2023<br>(பி.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச் செயலாளர்<br>பொறி. எம். ரவி<br>தெற்கு மண்டல செயலாளர் |
| 11. | கன்னியாகுமரி | 29.07.2023<br>(மு.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச்செயலாளர்<br>பொறி. எம். ரவி<br>தெற்கு மண்டல செயலாளர் |
| **மேற்கு மண்டலம்** | | | |
| 12. | தர்மபுரி | 22.07.2023<br>(பி.ப.) | பொறி. சி. பன்னீர் செல்வம்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. த. இரவிச்சந்திரன்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| 13. | சேலம் | 22.07.2023<br>(மு.ப.) | பொறி. சி. பன்னீர் செல்வம்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. த. இரவிச்சந்திரன்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| 14. | ஈரோடு | 10.07.2023<br>(பி.ப.) | பொறி. என். முருகேசன்<br>அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர்<br>பொறி. த. இரவிச்சந்திரன்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| 15. | கோவை-பொள்ளாச்சி | 22.07.2023<br>(மு.ப.) | பொறி. சு.பாஸ்கரன்<br>மாநிலத் தலைவர்<br>பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர் |
| **மைய மண்டலம்** | | | |
| 16. | திண்டுக்கல் | 15.07.2023<br>(மு.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச்செயலாளர்<br>ஏ. திருவேங்கடமூர்த்தி<br>மைய மண்டல செயலாளர் |
| 17. | தேனி | 14.07.2023<br>(பி.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச்செயலாளர்<br>ஏ. திருவேங்கடமூர்த்தி<br>மைய மண்டல செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | மதுரை | 29.07.2023<br>(மு.ப.) | பொறி. என். முருகேசன்<br>அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர்<br>பொறி. ஏ. திருவேங்கடமூர்த்தி<br>மைய மண்டல செயலாளர் |
| 19. | சிவகங்கை | 22.07.2023<br>(மு.ப.) | பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச்செயலாளர்<br>ஏ. திருவேங்கடமூர்த்தி<br>மைய மண்டல செயலாளர் |
| 20. | இராமநாதபுரம் | 14.07.2023<br>(பி.ப.) | பொறி. சி. பன்னீர் செல்வம்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. எஸ்.கே. கருப்புச்சாமி<br>வெளியீட்டுச்செயலாளர்<br>ஏ. திருவேங்கடமூர்த்தி<br>மைய மண்டல செயலாளர் |

பொறி. என். முருகேசன்
செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் S.சாந்தி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.

முன்னிலை: பொறி.கே.பி.சத்தியமூர்த்தி, பி.இ., எம்.சி.ஏ., எம்.ஐ.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)

செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/29070/2022, நாள் 15.06.2023.

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - த.நா.பொ.சா.ப. தொகுதி - 2023-2024 ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியல் ஊடாக சேர்த்து வெளியிடப்பட்டது - ஊட்டுப் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசு ஆணை எண்.158, PW (D2)துறை, நாள்.01.11.2021.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),நீ.வ.ஆ.து., சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ்.2(4)/28018/2022, நாள் 22.12.2022.
3. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),நீ.வ.ஆ.து., சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ்.2(4)/28018/2022, நாள் 10.05.2023.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/29070/2022, நாள் 16.05.2023.

பார்வை 4-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் 2023-2024 - ஆம் ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான ஒப்பளிக்கப்பட்ட தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து, திருவாளர்கள் G.பிரேமலதா, K.சரஸ்வதி, M.மகேஷ் ஆகிய தொழில்நுட்ப உதவியாளர்கள் (சிவில்), இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கு தேவையான 4 ஆண்டு காலம் பணிநிறைவு செய்துள்ளதினாலும், பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதினாலும், ஊட்டுப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதாலும், இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 40(2)-இன் படியும், தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதங்கள் 2017-இன்படி, நிலை எண். 13, 35900-113500 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக இளநிலைப் பொறியாளர்களாக (சிவில்) பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கப்படுகிறது.

2. இப்பதவி உயர்வினைத் தொடர்ந்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம் / வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

3. இவர்கள் உரிய அலுவலர்களிடமிருந்து மறு பணியமர்வு ஆணையினைப் பெற்று உரிய இடங்களில் 10 தினங்களுக்குள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பணியில் சேர வேண்டும் எனவும், அவ்வாறு பணியில் சேரத் தவறினால் இவர்களுக்கு இளநிலைப் பொறியாளர் (சிவில்)- ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்ட ஆணை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் எனவும், இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான உரிமையினை துறப்பு செய்ததாக கருதப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தங்கள் பதவி உயர்வு உரிமையினைத் துறப்பதாக

இருந்தால் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிகமாக துறக்க வேண்டும் என்றும் அதற்கான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4. இவர்கள் இளநிலைப் பொறியாளராக பணியில் சேருமிடத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் கல்வித்தகுதி, பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம் மற்றும் சொந்த தாலுகா / மாவட்டம் குறித்தான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5. இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியில் சேர்ந்த விவரத்தினை உரிய மாறுதல், பொறுப்பு மாற்று சான்றுடன் (CTC) உடன் இவ்வலுவலகத்துக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் உரிய தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இவர்களுக்கு உரிய மறுபணியமர்வு ஆணை கிடைக்கப் பெற்றதும் இவர்கள் தற்போது வகித்துவரும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கு (3 நபர்கள்) வழங்கப்படும் கருத்தியலான பதவி உயர்வு தொடர்பான பணப்பயன்களை தனியர்கள் தமிழ்நாடு அரசு அடிப்படை விதி 27 -இன் துணை விதி. 17- இன்படி பெறத் தகுதியுடையவர்களாவார்கள்.

இணைப்பு: பிற்சேர்க்கை

மேற்குறிப்பாணை எண்.எஸ்.1(2)/29070/2022, நாள். 15.06.2023.

நகல் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள், சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள், அவர்களுக்கு உரிய மறுபணியமர்வு ஆணை வழங்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது. இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களுக்கு மறுபணியமர்வு ஆணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும் என்ற நிபந்தனையுடன் மறுபணியமர்வு ஆணையினை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவர்களை சொந்த தாலுகாவில் பணியமர்வு செய்யப்படக்கூடாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பணியில் சேருமிடத்தில் தொடர்புடைய செயற்பொறியாளர்கள் பணியில் சேரும் நபர்களின் கல்வித்தகுதி, பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம், பதிவுத்தாள் மற்றும் சொந்த தாலுக்கா / மாவட்டம் குறித்தான சான்றுகளை ஆய்வு செய்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு உரிய மறு பணியமர்வு ஆணை கிடைக்கப் பெற்றதும், இவர்கள் தற்போது வகித்து வரும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த நபர்கள் பதவி உயர்வில் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியில் சேர்ந்த நாளினை இவ்வலுவலகத்திற்கு தவறாமல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- கே.பி.சத்தியமூர்த்தி
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை - 5.

பிற்சேர்க்கை

## இளநிலைப் பொறியாளர் (சிவில்) - ஆக பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் விவரம்

| வ. எண் | பெயர் / பதவி (ம) பிறந்த தேதி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | இளநிலைப் பொறியாளராக (சிவில்) பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. | G. பிரேமலதா<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>(30.07.1967) | கட்டட (க&ப) உபகோட்டம்-1, நாமக்கல்<br>கட்டட (க&ப) கோட்டம், நாமக்கல்<br>கட்டட (க&ப) வட்டம், ஈரோடு<br>கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் | கட்டட (க&ப) பிரிவு -2, திருச்செங்கோடு<br>கட்டட (க&ப) உபகோட்டம்,<br>திருச்செங்கோடு<br>கட்டட (க&ப) கோட்டம், நாமக்கல்<br>கட்டட (க&ப) வட்டம், ஈரோடு<br>கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் |
| 2. | K. சரஸ்வதி<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>(27.03.1970) | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு<br>உபகோட்டம், சேப்பாக்கம், சென்னை - 5<br>கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்,<br>சென்னை<br>திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்,<br>சேப்பாக்கம், சென்னை - 5. | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு பிரிவு-1,.<br>சென்னை.<br>கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு<br>உபகோட்டம், சேப்பாக்கம், சென்னை - 5.<br>கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு<br>கோட்டம், சென்னை<br>திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்,<br>சேப்பாக்கம், சென்னை - 5. |
| 3. | M. மகேஷ்<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>(08.03.1974) | நீதிபதி பங்களா பிரிவு, சென்னை-28.<br>தென்மாநகர கோட்டம், சென்னை.<br>கட்டட பராமரிப்பு வட்டம், சென்னை - 5.<br>சென்னை மண்டலம், சென்னை. | NKM பிரிவு, சென்னை-9<br>தலைமைச் செயலகம் உபகோட்டம்,<br>சென்னை-9<br>வடமாநகர கோட்டம், சென்னை-5.<br>கட்டட பராமரிப்பு வட்டம், சென்னை.<br>சென்னை மண்டலம், சென்னை. |

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**ABSTRACT**

**PENSION/FAMILY PENSION** - Simplification of mustering process - Tamil Nadu State Government Pensioners - Annual Mustering of Pensioners / Family Pensioners during the month of their retirement / commencement - Orders - issued.

**FINANCE (Pension) DEPARTMENT**

**G.O.(Ms).No. 165** **Dated: 31-05-2023.**
**Sobakiruthu, Vaikasi - 17.**
**Thiruvalluvar Aandu 2054.**
**Read:-**

1. G.O. Ms. No. 215, Finance (Pension) Department, dated: 26-03-2020.
2. G.O.Ms. No. 136, Finance (Pension) Department, dated: 20-05-2022.
3. Announcement made by Hon'ble Minister for Finance and Human Resources Management in the floor of Legislative Assembly on 19.04.2023.
4. From the Commissioner of Treasuries and Accounts, Rc.No.9397/ 2023/ E-2, dated 24.04.2023, 28.04.2023 and 12.05.2023.

**ORDER:**

In the Government Order first read above, orders have been issued allowing the Pensioners to submit their Life Certificate at any time during the month of July, August, September every year for annual mustering instead of April, May and June to the concerned Pension Disbursing Officers.

2. In the Government Order second read above, Government accord Permission to carry out Pensioners mustering process on a regular basis from the year 2022 in the month of July, August, September after a gap of two years due to Covid- 19 and also the pensioners shall at their convenience be allowed to choose any one of the following facilities:

1) Digital Life Certificate (DLC) through Jeevan Pramaan Portal by using the services of any one of the following entities as per the option of the pensioners.
   *a)* India *Post Payments Bank (IPPB)* with *Door Step* Services.
   *b) e-Seva centers /* Common Service Centers *(CSC).*
   c) *Pensioner's* Associations having *biometric Device Connected* with *Jeevan Pramaan portal.*
2) Submission of Life Certificate through Post.
3) Direct Mustering (Physical Appearance).

3. Further, it has been instructed that, all the Treasury Officers / Sub Treasury Officers/ Pension Pay Officer, Chennai shall motivate e- mustering Digital Life Certificate (DLC) and to ensure at least 80% Annual mustering is done through Jeevan Pramaan Portal by utilizing the Door Steps Services of IPPB/e Seva Centre / CSC thereby avoiding hardship to the Pensioners / Family Pensioners of coming to the Pension Office / Treasuries in person for mustering since the Pensioners are finding it difficult to visit the concerned Treasury offices for mustering due to their old age.

4. In the reference third read above, the Hon'ble Minister for Finance and Human Resources Management has made the following Announcement in the floor of Legislative Assembly on 19.04.2023.

**ஆண்டு முழுவதும் ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்:**

**ஓய்வூதியர் நேர்காணல் என்பது கருவூல கணக்குத் துறையில் ஓய்வூதியர் உயிர்வாழ்வினை ஒவ்வொரு ஆண்டும் உறுதி செய்யும் அடிப்படை பணியாகும். தற்போது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் செப்டம்பர் வரை நேர்காணல் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் எளிதில் இச்சேவைகளைப் பெறும் வகையில், ஆண்டு முழுவதும் ஓய்வூதியர் நேர்காணல் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.**

5. In the reference fourth read above, The Commissioner of Treasuries and Accounts has furnished a proposal to carry out the mustering process for Pensioners every year in the month in which they have retired and the month following the month of retirement will be allowed as grace period for mustering.

**For Example:** If the Pensioner retired in the month of July, he / she shall be mustered in any one of the day from 1st July to 31st July and allowed one month grace period from1st August to 31st August. If the pensioner failed to complete their mustering process on or before 31st August, then their monthly pension will be stopped from the month of September onwards.

6. After careful examination of the proposals of the Commissioner of Treasuries and Accounts, the Government accord permission to adopt the new system of annual mustering throughout the year with effect from **01.07.2023** onwards as below:-

i. Mustering in respect of service Pensioner shall be conducted in the month of retirement of the Pensioner every year.

ii. In the case of Pensioner drawing both service and Family Pension (double pension) the month of mustering shall be the retirement month of the service pensioner every year.

iii. In respect of Family Pensioners, Ex-gratia Pensioners and Special category pensioners (Ulema Pensioners and State Freedom Fighter Pensioners etc.,) the mustering shall be conducted in month of commencement of Family Pension, Ex-gratia Pension and Special category Pension every year.

iv. If the pensioner, Family Pensioner and Special category Pensioner failed to do the mustering process then the pension will be stopped in the succeeding month of the grace period of the year.

7. The Government direct that the Pensioners / Family Pensioners those who are due for mustering for the month of April, May and June 2023 may be called for mustering in the month of July, 2023 as a special case for the year 2023-2024 only.

8. The Government also direct that to avoid hardship to the Pensioners, the Commissioner of Treasuries and Accounts has been permitted to make awareness among the Pensioners / Family Pensioners / Special Pensioners and to permit the mustering process under the new system throughout the year by liberalizing the crucial date for withholding the pension due to non-mustering as a special case for the Financial Year 2023-2024 alone and the Commissioner of Treasuries and Accounts should ensure that proper communication is given to the Pensioners on this new system.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T.UDHAYACHANDRAN,**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**சுருக்கம்**

தேர்வுகள் - சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க விதிகளை தளர்த்தல் சம்பந்தமாக - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

**மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை**

அரசாணை (நிலை) எண்.41

நாள்: 09.05.2023.
சோபகிருது, சித்திரை-26,
திருவள்ளுவராண்டு, 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.1120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 30.10.1984.
2. அரசுக் கடித எண்.9140/பணி.எம்/89-11, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 20.11.1989.
3. அரசாணை (நிலை) எண்.51, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 07.05.2020.
4. அரசாணை (நிலை) எண்.29, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 25.02.2021.

**ஆணை:**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில், சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து ஒரு அரசு அலுவலருக்கு விலக்களிக்க அவர் பெருட்டு விதிகளைத் தளர்த்த கீழ்க்காணும் நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

i. சம்மந்தப்பட்ட அரசு அலுவலர் 53 வயதிற்குக் குறையாதவராக இருக்க வேண்டும்.

ii. தொடர்புடைய அரசு அலுவலர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக தொடர்புடைய

துறை / சிறப்பு தேர்வினை ஐந்து தடவைகள் தேர்வு மையத்திற்கு வந்து தேர்வுகள் எழுதியதற்கான விண்ணப்பதாரரின் அனுமதிக் குறிப்பாணையுடன் (Hall tickets) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேராதவர்கள் ஆகிய விவரப் பட்டியல் (Detailed Results) அடங்கிய அரசுப் பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீட்டை (Tamil Nadu Public Service Commission Bulletin) வைத்து அனுப்ப வேண்டும்.

iii. அவர் இந்த சலுகையை அடையத்தக்க அளவிற்கு அவருடைய பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்.

2. மேலே மூன்றாவதாக மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது 59 மற்றும் 60 ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க விதிகளை தளர்த்தக் கோரும் சலுகையினை அடைய 53 வயதுக்கு குறையாதவர்களாக இருக்க வேண்டும் என்பது அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆக இருந்த போது நிர்ணயிக்கப்பட்டதாகும். மேலே தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தங்களின்படி, தற்போது அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இந்த விதிவிலக்கு அளிக்க 53 வயது என்று நிர்ணயித்துள்ளதை 55 வயதாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளுக்கிணங்க, மேலே ஒன்றாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தினைப் பின்பற்றி கீழ்க்கண்ட ஆணையினை அரசு வெளியிடுகிறது.

"சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் ஒரு அரசு அலுவலர் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அவர் பொருட்டு விதிகளைத் தளர்த்த கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்ய வேண்டும்.

i. சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் 55 வயதிற்குக் குறையாதவராக இருக்க வேண்டும்.

ii. தொடர்புடைய அரசு அலுவலர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக தொடர்புடைய துறை / சிறப்பு தேர்வினை ஐந்து தடவைகள் தேர்வு மையத்திற்கு வந்து தேர்வுகள் எழுதியதற்கான விண்ணப்பதாரரின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுடன் (Hall tickets) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேராதவர்கள் ஆகிய விவரப் பட்டியல் (Detailed Results) அடங்கிய அரசுப் பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீட்டை (Tamil Nadu Public Service Commission Bulletin) வைத்து அனுப்ப வேண்டும்.

iii. சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் இந்த சலுகையை அடையத்தக்க அளவிற்கு அவருடைய பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்."

3. மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை, சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க விதிகளை தளர்த்தக் கோரும் கோரிக்கைகளை பரிந்துரை செய்யும்பொது கருத்தில் கொள்ளுமாறு அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் துறைத் தலைமைகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மைதிலி க.ராஜேந்திரன்,**
**செயலாளர்.**

## கருவூலம் மற்றும் கணக்குத்துறை

அனுப்புநர்

திரு.க.விஜயேந்திரபாண்டியன், இ.ஆ.ப.,
கருவூலக் கணக்கு ஆணையர்,
பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை,
கால்நடை மருத்துவமனை வளாகம்,
நந்தனம், சென்னை-35.

பெறுநர்

1) அனைத்து கருவூல அலுவலர்கள்,
2) ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்,
சென்னை.

ந.க.9397/2023/உ2 நாள்:30.06.2023

அய்யா / அம்மையீர்,

பொருள்: கருவூல கணக்குத் துறை - ஓய்வூதியர் நேர்காணல் - 2023-ம் ஆண்டு புதிய நடைமுறையின் படி ஆண்டு முழுவதும் (மாதாந்திர) நேர்காணல் - அறிவுரைகள் வழங்குவது - தொடர்பாக.

பார்வை: அரசாணை நிலை எண்.165 நிதி (ஓய்வூதியம்)த்துறை நாள் 31.05.2023

பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி மார்ச் 2023 வரையிலான ஓய்வூதியர்கள் (Civil) பணி ஓய்வு பெற்ற மாதத்திலும், குடும்ப ஓய்வூதியர் மற்றும் சிறப்பு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஓய்வூதியம் தொடங்கப்பட்ட மாதத்திலும் மேலும், ஏப்ரல்,மே மற்றும் ஜூன் மாதத்தில் நேர்காணல் செய்யப்பட வேண்டிய ஓய்வூதியதாரர்கள் 2023-24ம் ஆண்டிற்கு சிறப்பு நேர்வாக ஜூலை 2023 மாதத்தில் நேர்காணல் செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் நேர்காணல் நிதியாண்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதால் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நேர்காணல் செய்யப்பட வேண்டிய ஓய்வூதியர்கள் / குடும்ப (ம) சிறப்பு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2024ம் மாதத்தில் நேர்காணல் செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்கள் நேரில் கருவூலத்திற்கு வருவதில் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு ஜீவன் பிரமான் இணையதள மின்னணு வாழ்நாள் சான்று மூலமாக ஓய்வூதியர்கள் நேர்காணல் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பின்வரும் ஏதேனும் ஒரு சேவையினை பயன்படுத்தி இணையதள வாழ்நாள் சான்று பதிவு செய்து ஆண்டு நேர்காணல் செய்து கொள்ள ஓய்வூதியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1) இந்திய தபால் துறை வங்கியின் மூலம் ஓய்வூதியரின் இருப்பிடத்திற்கு சென்று வாழ்நாள் சான்று பதிவு செய்தல் (India Post Payment Bank Door Step Services)
2) இ -சேவை / பொது சேவை மையங்களின் மூலமாக இணையதள வாழ்நாள் சான்று வழங்குதல்
3) ஓய்வூதிய சங்கத்தின் மூலம் கைவிரல் பதிவு கருவியினை (Bio-metric Device) பயன்படுத்தி இணையதள வாழ்நாள் சான்று வழங்குதல்
4) ஜீவன் பிரமான் முகம் பதிவு செயலி (Jeevan Pramaan Face App) பயன்படுத்தி ஓய்வூதியர்கள் தங்களது இருப்பிடத்திலிருந்தபடியே Android கைபேசி மூலம் இணையதள வாழ்நாள் சான்று சமர்ப்பிக்கலாம்.

மேலும், ஓய்வூதியர்கள் கருவூலத்திற்கு நேரிடையாக ஆண்டு நேர்காணலுக்கு வரும் நேர்வில் அதற்கு முன்னேற்பாடாக கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை மற்றும் அனைத்து கருவூல அலுவலர் / உதவி கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**I ஓய்வூதியர்களுக்கு செய்ய வேண்டிய சிறப்பு ஏற்பாடுகள்**

1. நேர்காணலுக்கு வரும் ஓய்வூதியர்களுக்கு அவர்கள் அமரும் இடம் தூய்மையாகவும், போதுமான இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
2. போதிய குடிநீர் வசதிகள் ஏற்பாடு செய்திடல் வேண்டும்.
3. நேர்காணலுக்கு என்றே பிரதியோகமாக சிறப்பு கவுண்டர்கள் அமைத்திட வேண்டும்.
4. ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் கருவூல அலுவலகங்களில் நேர்காணலில் பங்கேற்கும் போது திடீரென உடல் நல கோளாறு ஏற்படும் நேர்வின் போது போதிய மருத்துவ முதலுதவி முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**II நேர்காணல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள்:**

1. ஓய்வூதியர்கள் நேரிடையாக கருவூலத்திற்கு நேர்காணலுக்கு வருகை தரும் நேர்வில் அவர்களது ஓய்வூதிய புத்தகத்தில் அவர்களது ஓய்வூதிய நேர்காணல் மாதம் குறித்து பதிவு செய்து கொடுக்கப்பட வேண்டும்.
2. ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு தங்கள் ஓய்வு பெற்ற மாதம் / தங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் துவங்கப்பட்ட மாதம் தெரியாத நிலையில் அத்தகைய ஓய்வூதியர்கள் தங்களுக்கு விருப்பமான எந்த மாதத்திலும் 2023ம் ஆண்டிற்கான நேர்காணல் செய்து கொள்ளலாம் என்ற விபரம் ஓய்வூதியர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
3. அனைத்து கருவூலங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள கைவிரல் பதிவு இயந்திரம் (Bio-metric device) அனைத்தும் இயங்கும் நிலையில் உள்ளதா என்பதையும், உரிய நிறுவனத்திடம் நடப்பாண்டிற்கு புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.
4. ஓய்வூதிய நேர்காணல் தொடர்பாக, பத்திரிக்கைகளில் செய்தியாக (Press Release) வெளியிடப்பட வேண்டும். (செய்திகுறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.)
5. மத்திய அரசின் இணையதளம் "ஜீவன் பிரமான்" (www.jeevanpramaan.gov.in) மூலம் ஓய்வூதியர்கள் தங்கள் மின்னனு உயிர் வாழ் சான்றினை அளிக்கும் வசதி குறித்து உரிய விழிப்புணர்வினை ஓய்வூதியர்களுக்கும், ஓய்வூதியர் சங்கங்களுக்கும் ஏற்படுத்த வேண்டும்.
6. IFHRMS ல் வீட்டு முகவரி, கைபேசி எண், PAN எண், மின்னஞ்சல் மற்றும் ஆதார் எண் உட்பட ஏதேனும் விடுப்பட்டுள்ள இனங்களுக்கு உரிய விபரங்களை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
7. தபால் மூலம் பெறப்பட்ட உயிர்வாழ் சான்றிதழ் (Life Cetificate) உடனடியாக IFHRMS ல் தினந்தோறும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
8. நேர்காணலின் போது, இணையதள இணைப்பு / மின்சாரமின்மை போன்ற நிகழ்வுகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் இக்காரணங்களுக்காக ஓய்வூதியரை காத்திருக்கவோ அல்லது மீண்டும் கருவூலத்திற்கு வரவழைக்க கூடாது.

மேற்காணும் அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் தெரிவித்து 2023 ஆண்டிற்கான ஓய்வூதிய நேர்காணலை சிறந்த முறையில் மேற்கொள்ளுமாறு அனைத்து கருவூல அலுவலர் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் (சென்னை) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

**க.விஜயேந்திர பாண்டியன்**
**கருவூலக் கணக்கு ஆணையர்**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 262 நீர்வளத் (டி2) துறை நாள் 30.06.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S. இராமமூர்த்தி | தலைமைப் பொறியாளர் |
| 2. | P. செந்தில்குமார் | சிறப்பு அரசு செயலாளர் |
| 3. | S. இளங்கோ | இணைத் தலைமைப் பொறியாளர் |
| 4. | A. பரகத்நிஷா | கண்காணிப்புப் பொறியாளர் / தி.இயக்குநர் |
| 5. | R.A. முருகேசன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 6. | R. செல்வராஜன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 7. | P. கிருஷ்ணன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 8. | S. இந்திரா காந்தி | துணைத் தலைமைப் பொறியாளர் |
| 9. | T. அன்பரசன் | செயற்பொறியாளர் |
| 10. | T. மகாலட்சுமி | தலைமை பணியாளர் அலுவலர் |
| 11. | C. இந்திரா | உதவிசெயற்பொறியாளர் |
| 12. | P. மாரிச்செல்வன் | உதவிசெயற்பொறியாளர் |
| 13. | R. செல்லபாண்டியன் | உதவிசெயற்பொறியாளர் |
| 14. | K. சந்திரமோகன் | உதவிசெயற்பொறியாளர் |
| 15. | R. தெட்சிணாமூர்த்தி | உதவிசெயற்பொறியாளர் |
| 16. | R. விஜயா | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2023/நாள். 30.06.2023ன் படி 30.06.2023 பி.ப அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

| வ.எண். | பெயர் | பிறந்த தேதி | பதவி |
|---|---|---|---|
| 1. | N.K. சகுந்தலா | 15.06.1963 | ஆட்சி அலுவலர் |
| 2. | S. ஜெகநாதன் | 15.06.1963 | உதவிப் பொறியாளர் |
| 3. | P. தனசேகரன் | 14.06.1963 | உதவிப் பொறியாளர் |
| 4. | A. ராஜூ | 27.06.1963 | இளநிலைப் பொறியாளர் |

ஒம்/- A.முத்தையா
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது) நீவது

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.தெட்சிணாமூர்த்தி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.5,000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.தெட்சிணாமூர்த்தி, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பணிஓய்வை முன்னிட்டு ரூ.5,000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மைய மண்டல செயலாளர் பொறியாளர் S.நடராஜரத்தினம், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் மனைவி திருமதி. A.வினோதினி அவர்கள் 26.06.2023 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளையின் உறுப்பினர் பொறியாளர் G.விஜயமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி K.நாகஜோதி அவர்கள் 03.07.2023 அன்று இயற்கை எய்தினார்.

### பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 91 பொதுப்பணித் (பணி 1-2) துறை நாள் 30.06.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | R. இளஞ்செழியன் | தலைமைப் பொறியாளர் |
| 2. | K. புனிதவேல் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 3. | K. அசோக் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 4. | R. மணிவண்ணன் | செயற்பொறியாளர் |
| 5. | K. அய்யாசாமி | உதவி செயற்பொறியாளர் (மின்) |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தர மோகன். B**
**அரசு முதன்மைச் செயலாளர்**

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

**புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos. 9444 999 588, 9444 65 65 44**
**E.mail: d.murugavelsivan@gmail.com**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் C.இந்திரா, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை உறுப்பினர் பொறியாளர் M.வெங்கட்ராமன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைச்செயலாளர் வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளை உறுப்பினர் பொறியாளர் B.இரத்தினசாமி, இளநிலைப்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



## பொறிஞர் ம.பலராமன் அவர்களின் 85 வயது நிறைவு விழா அழைப்பிதழ்

**அன்புடையீர்,**

வணக்கம், வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன். பின்வரும் விவரப்படி நடைபெறும் விழாவில் தாங்கள் அவசியம் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

**நாள் : 16.07.2023, ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி - 1.00 மணி**

**இடம் : அமரர் Er.C.சண்முகப்பெருமாள் அரங்கம், பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகம், தமிழ்நாடு பொறியியல் சங்க சேலம் கிளைக் கட்டடம், அஸ்தம்பட்டி, சேலம் -7.**

தலைமை : முனைவர் **திருமதி.சிவகாமி பரமசிவம்,** Ph.D., வரலாற்றுப் பேராசிரியை (ப.நி),

இறை வணக்கம் : கவிதாயினி **திருமதி. முல்லை மாணிக்கம்** அவர்கள்,

வழா வரவேற்பு : குடும்ப ஓய்வூதிய தொண்டறச்செம்மல் **பொறிஞர் S.N. கொளந்தன்,** நாமக்கல்

மலர் அறிமுக உரை : **பொறிஞர் சி.இராமசாமி,** மலர்க்குழுத்தலைவர், சேலம்.

மலர் வெளியிடுபவர் : **பொறிஞர் முனைவர் P.செங்கோடன்** அவர்கள்,
SPK பள்ளிகள், SPK ரியல் எஸ்டேட் நிறுவனர், திருச்செங்கோடு.

மலர் பெறுபவர் :
1. புகழ்மிகு **மருத்துவர் K.அர்த்தனாரி,** M.S. மேலாண்மை இயக்குநர், ஸ்ரீ கோகுலம் மருத்துவமனைகள், சேலம்.
2. புகழ்மிகு**Dr.S.K.செந்தில்ராஜன்,** B.Sc., BNYS மேலாண்மை இயக்குநர். N.S. யோகா & இயற்கை மருத்துவமனை, சேர்வா ஸ்டெல்லர் ரிசார்ட், ஏற்காடு
3. முனைவர் **L.வேலாயுதம்,** M.B.A, M.L, Ph.D., வெற்றி ரியல்ஸ், செங்கல்பட்டு.
4. திருமதி.**Dr.K.தாரணீஸ்வரி,** Ph.D., அரசு கல்லூரி பேராசிரியை, மேட்டூர்.

**வாழ்த்துரை**

1. புகழ்மிகு மருத்துவர் **மேஜர் D.ராஜா,** (வயது 80) மருத்துவக்கல்வி இயக்குநர் (ப.நி) மற்றும் முந்நாள் துணைவேந்தர் Dr.MGR மருத்துவ பல்கலைக் கழகம்.
2. பத்மஸ்ரீ **வ.செ.நடராஜன்,** முதியோர் நல மருத்துவ வல்லுநர் மற்றும் முதியோர் நல நிறுவனர், 30க்கும் மேற்பட்ட முதியோர் நலன் சார் நூல்கள் எழுதிய நூல் ஆசிரியர்.
3. புகழ்மிகு **C.முனியநாதன்,** IAS Former C.T.A & தலைவர், TNPSC, Chennai.
4. புகழ்மிகு **தென்காசி ஜவஹர், I**AS Former CTA & அரசு கூடுதல் தலைமைச்செயலர், சென்னை-9.
5. புகழ்மிகு **P.R.சம்பத்,** IAS (R) முந்நாள் அரசு முதன்மைச் செயலாளர் (ப.நி) மற்றும் தலைவர், இந்திய அலுவலர்கள் சங்கம் (IOA) இராயப்பேட்டை, சென்னை.
6. புகழ்மிகு மனிதநேயமிக்க **மயிலை த.வேலு,** B.A., LLB., சட்டமன்ற உறுப்பினர், மயிலை தொகுதி.
7. புகழ்மிகு **பல்பாக்கி C.கிருஷ்ணன்,** முந்நாள் சட்டமன்ற உறுப்பினர், ஓமலூர்.
8. உயர்திரு.**P.இராமமூர்த்தி,** தலைமைப் பொறியாளர் (ப.நி) PWD
9. ஆயிரம் பிறை கண்ட மூத்த மருமகன் திரு.**H.இராமசந்திரன்,** நிழக்கிழார் (ம) பேருந்து உரிமையாளர்.
10. உயர்திரு.**K.ஜெகதீசன்,** உதவிசெயற்பொறியாளர் (ப.நி) TNEB மற்றும் நண்பர்கள், உறவினர்கள்.

நன்றியுரை & நாட்டுப்பண் : **பொறிஞர் K.சுப்ரமணியம்,** உ.செ.பொ, வே.பொ.து. (ப.நி) & சேர்ந்து இசைத்தல்

பகல் விருந்து : பொறிஞர் **கைலாஷ் கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் ஏற்பாடு செய்துள்ள பகல் உணவினை அனைவரும் ஏற்று மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பின் அழைப்பில்**

**Dr. சிவகாமி பரமசிவம், சந்திரலேகா புருஷோத்தமன், உமா செந்தில்நாதன், இராதா முருகேசன், யசோதா சண்முகசுந்தரம், இராதா அசோகன், பரஞ்சோதி வைத்தியலிங்கம்**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

அருள்மிகு கண்ணபிரான் திருவருள் துணைக்கொண்டு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி மாதம் 20-ஆம் தேதி ஜூலை மாதம் 5-ஆம் தேதி **(05.07.2023) புதன்கிழமை** துவிதியை திதி, உத்திராடம் நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை **06.00 மணிக்குமேல் 07.30 மணிக்குள்** மிதுன லக்னத்தில்

திருவண்ணாமலை மாவட்டம், தெய்வத்திருவாளர்கள் **இரா.அருணாசலம் - சாரதா** அவர்களின் பௌத்திரனும், தெய்வத்திருவாளர்கள் **கே.கண்ணன் - காசியம்மாள்** அவர்களின் பொளத்திரனும், **திரு.அ.மணிமாறன்** - திருமதி **பேபி** அவர்களின் மூத்த குமாரனுமான திருநிறைச்செல்வன்

## M.மனோஜ் குமார், B.E., M.S.,

**என்கிற வரனுக்கும்**

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தெய்வத்திரு.**N.நரம்பப் பிள்ளை** - திருமதி. **குப்பம்மாள்** திருவண்ணாமலை மாவட்டம், கருங்காலிகுப்பம், திரு. **நாராயணசாமி பிள்ளை** - திருமதி **சாரதா** அவர்களின் பேத்தியும், சென்னை திரு.**N. ரேணு** - திருமதி **இந்திரா** அவர்களின் குமாரத்தியுமான திருநிறைச்செல்வி

## R.லோகேஷ்வரி, B.E.,

**என்கிற கன்னிகைக்கும்**

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம், மேற்படி சுபமுகூர்த்தம் சென்னை-600077, நெம்பர்1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, வேலப்பன்சாவடியில் அமைந்துள்ள **கே.வி.என். திருமண மஹாலில்** நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் அன்புள்ள,*

Er. **அ.மணிமாறன்,**
முன்னாள் சென்னைக்கிளை செயலாளர்
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5
திருமதி. **பேபி மணிமாறன்**
மருத்துவர் **ம. நிரஞ்சனா தேவி**,.MDS.,
செல்: 98403 27971.

**<u>வரவேற்பு</u>**
**04.07.2023**
**செவ்வாய் கிழமை**
**மாலை 06.30 மணி.**

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்கும்

**சுற்றமும் நட்பும்**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளைத்தலைவர் பொறியாளர் P.மாரிச்செல்வன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொதுப்பணித்துறை (ம) நீர்வளத்துறை அமைச்சுப் பணியாளர் ஒன்றியத்தின் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் R.தெட்சிணாமூர்த்தி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு மையச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளைத்தலைவர் பொறியாளர் S.எட்வின்ஜெயராஜ், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Under Postal Regd No. TN/CH/(C)/591/2022-2024 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2022-2024,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

JULY 2023

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளைச்செயலாளர் பொறியாளர் S.கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,